**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination March - 2020.**

FWC

| juk;:- 12 (2021) | Gtpapay;- I | Neuk;:- 3 kzpj;jpahyk;<br>Nkyjpf thrpg;G Neuk;10 epkplk; |
|---|---|---|

**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள் வினாத்தாளை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துங்கள்.**

**அறிவுறுத்தல்கள்**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I 20 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.
- பகுதி I இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்படவேண்டும்.
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் **அ, ஆ, இ** என மூன்று பகுதிகளிலும் ஆறு (06) வினாக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் **ஒரு வினா கட்டாயமாகத் தெரிவு செய்து** எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
- பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றிக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்
- இடவிளக்கப்படமொன்றின் பகுதியும் உலகப்படம் ஒன்றும் வழங்கப்படும்.

agaram.lk

## பகுதி - I

01) 1:50,000 இடவிளக்கப்படத்தில் பாதுகாக்கப்பட்ட வன எல்லை, சேற்றுநிலம் என்பவற்றைக் குறித்துக் காட்டப்பயன்படும் நிறங்கள் முறையே
1. கறுப்பு, நீலம்   2. சிவப்பு, மஞ்சள்   3. பச்சை, கபிலம்
4. மஞ்சள், கறுப்பு   5. பச்சை, சிவப்பு   (   )

02) படம் ஒன்றினை அமைக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய அடிப்படை அம்சங்கள்
1. குறியீடுகள், இலக்கங்கள், நிறங்கள்
2. அமைவிடம், அளவுத்திட்டம், திசை
3. குறியீடுகள், அளவுத்திட்டம், நிறங்கள்
4. அமைவிடம், அளியடைப்பு வடக்கு, இலக்கங்கள்
5. குறியீடுகள், இலக்கங்கள், அமைவிடம்   (   )

03) இலங்கையின் 1 : 50,000 இடவிளக்கப் படங்களின் படத்தாள்களின் எண்ணிக்கை
1. 92   2. 90   3. 89   4. 80   5. 75
(   )

04) பின்வருவனவற்றில் பௌதிக அம்சங்கள் உள்ளடங்கிய விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

1. காடுகள், குளம், நீர்த்தேக்கம்
2. சமவுயரக்கோடு, பிரதான வீதி, ஆறு
3. பாதுகாப்பட்ட வனம், சிறுவீதி, நடைபாதை
4. பிரதானவீதி, மணல்மேடு, குடா
5. ஆற்றுத்தொகுதி, மியாந்தர்வளைவு, சமவெளி ( )

05) கீழே தரப்பட்டவற்றிலிருந்து இடம் சார் தரவுகள் அடங்கிய விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

1. உலக சனத்தொகை அளவு, வீதிகளின் நீளம், பயிர் நிலங்களின் அளவு
2. கிணறுகளின் நீரின் தரம், வீதியின் நீளம், கிணறுகளின் பரம்பல்
3. கிணறுகளின் பரம்பல், பயிர்களின் பரம்பல், வீதிகளின் நீளம்
4. பயிர்பரம்பல், நாடு ஒன்றின் அமைவு, நதிகள்
5. வீதிகளின் நீளம், வீதிகள், கிணறுகளின் பரம்பல். ( )

06) பின்வருவனவற்றிலிருந்து (Out put) வெளியீட்டு சாதனங்களைத் தெரிவு செய்க.

1. காந்த இறுவட்டு, விசைப்பலகை
2. வருடிகள், எண்ணிலக்கமாக்கும் கருவி
3. திரை, அச்சு உபகரணம்
4. வருடிகள், திரை
5. சுட்டி, திரை ( )

07) சமுத்திர அகழிகள், நடுச்சமுத்திரப் பாறைத் தொடர்கள் உருவாகியிருப்பது

1. கண்டவாக்க விசையினால்
2. இழுவிசையினால்
3. அமுக்க விசையினால்
4. மலையாக்க விசையினால்
5. கிடையான விசையினால் ( )

08) வளி மண்டலத் தோற்றப்பாடுகள் எல்லாம் காணப்படும் வளி மண்டலத்தின் படை

1. இடை மண்டலம்
2. வெப்ப மண்டலம்
3. படை மண்டலம்
4. மாறன் மண்டலம்
5. அயன மண்டலம் ( )

09) கற்கோளத்தின் ஒரு பகுதியாகக் காணப்படும் புவியோடு புவியின் நிலத்திணிவில் கொண்டிருக்கும் சதவீதத்தினளவு

1. 25 %
2. 20%
3. 10 %
4. 5 %
5. 1%

( )

10) பின்வரும் பாறைகளில் இருந்து சேதன முறையால் உருவாகிய அடையற் பாறைகளைத் தெரிவு செய்க.

1. உருண்டைக்கற்றிரள், களி
2. மணல், மணற்கல்
3. சேறு, மாக்கல்
4. சுண்ணாம்புக்கல், முருகைக் கற்பாறை
5. நிலக்கரி, கிமோனைட் ( )

11) மண்ணின் கட்டமைப்பில் கனியங்களை உறுஞ்சித் தக்கவைக்கும் வலயம் எது?

1. O
2. A
3. B
4. C
5. R

( )

12) யாழ்ப்பாணக் குடா நாட்டின் சுண்ணாம்புக்கற் பாறைகள் உருவாகிய காலம்

1. இயோசின் காலம்
2. மயோசின் காலம்
3. பிறி கேம்பிரியன் காலம்
4. கேம் பிறியன் காலம்
5. யுராசிக் காலம் ( )

agaram.lk

13) பின்வருவனவற்றிலிருந்து காற்றரிப்பினால் உருவான நிலவுருவங்களைத் தெரிவு செய்க.
1. யடாங்கு, தளத்திடைக் குன்று, களான் வடிவப்பாறை
2. பியூடா, வட்டக்குகை, கூம்பகச்சிகரம்
3. லெபீஸ், போல்ஜே, உவாலாஸ்
4. யடாங்கு, வட்டக்குகை, குவடு
5. அலைவெட்டிய மேடை, மணற்குன்று, பிறையுரு மணற் குன்று ( )

14) பருமட்டான பிறப்பு வீதம் மிக உயர்வாகக் காணப்படும் ஆபிரிக்க நாடு
1. உகண்டா 2. மாலி 3. கென்யா
4. நைகர் 5. நைஜீரியா ( )

15) பெண்களின் பங்களிப்பு ஆண்களின் பங்களிப்பினை விடக் குறைவாகக் காணப்படுவது
1. ஆசிரிய தொழிலில் 2. அரசியலில் 3. வங்கித் தொழிலில்
4. உயர் கல்வி பெறுவதில் 5. கைத்தொழிலில் ( )

16) இலங்கையில் கூடிய, குறைந்த பிறப்பு வீதம் காணப்படும் மாகாணம்
1. வட மாகாணம் 2. கிழக்கு மாகாணம் 3. மேல் மாகாணம்
4. வட மத்திய மாகாணம் 5. வடமேல் மாகாணம் ( )

17) நகரப் படிநிலை அமைப்பில் மிகச்சிறியதும், சிக்கல் தன்மை குறைந்ததுமான குடியிருப்பு வகையைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.
1. பெருநகரம் 2. பட்டினம் 3. பண்ணைவீடு
4. கிராமம் 5. குக்கிராமம் ( )

18) புராதன காலத்தில் மொசப்பதேமியப் பிரதேசத்தில் உருவாகியிருந்த நாகரிகக் குடியிருப்பு ஒன்று
1. மொகஞ்சதாரோ 2. ஹரப்பா 3. மாயா
4. இன்கா 5. ஊர் ( )

agaram.lk

19) 2050 ஆண்டில் நகராக்கம் 100% ஆக இருக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ள ஆசிய நாடு
1. சிங்கப்பூர் 2. ஜப்பான் 3. இந்தியா
4. இலங்கை 5. ஈரான் ( )

20) நகரப்பகுதிகளில் மாசடைவதற்குக் காரணமான வாயுக்களில் ஒன்று
1. மீதேன் 2. காபன் மொனோக்சைட் 3. குளோரோ புளோரோ காபன்
4. நைதரசன் மொனோக்சைட் 5. ஐதரசன் மொனோக்சைட் ( )

**(20 x 1 = 20 புள்ளிகள்)**

## பகுதி II

❖ இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1 : 50,000 அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத்தரப்பட்டுள்ளது. அதில் சம உயரக்கோடுகளின் இடைவெளி 20 மீற்றரினால் காட்டப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**குறிப்பு**

- **படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது**
- **விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் அதன் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.**
- **உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க வேண்டாம்.**

1)

i. 1 – 6 வரை இலக்கமிடப்பட்டிருக்கும் புவியியல் அம்சங்களை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

*(03 புள்ளிகள்)*

ii. உமக்குத் தரப்பட்ட படப் பிரதேசத்தின் பரப்பளவினை சதுர கிலோ மீற்றரில் தருக.

*(02 புள்ளிகள்)*

iii. இப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்படும் பயிர்கள் நான்கு தருக.

*(02 புள்ளிகள்)*

iv. உமக்குத் தரப்பட்ட பிரதேசத்தின் வீதி வலையமைப்புத் தொடர்பாகச் சுருக்கமாக விளக்குக.

*(05 புள்ளிகள்)*

v. இப் பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

*(06 புள்ளிகள்)*

vi. உமக்குத் தரப்பட்ட பிரதேசத்தின்
   a) காலநிலை வலயம்
   b) மக்களால் பின்பற்றப்படுகின்ற மதம் என்பவற்றைத் தருக.

*(02 புள்ளிகள்)*

agaram.lk

2) தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

i. றொக்கி மலைத்தொடர்
ii. நைல் நதி
iii. பற்றக்கோனியா பாலைவனம்
iv. கட்சன் குடா
v. மத்திய தரைக்கடல்
vi. தாஸ்மானியா
vii. குறையில் நீரோட்டம்
viii. வளி மாசடைதலினால் அதிகளவில் பாதிக்கப்பட்ட சீன நகரம்
ix. எண்ணெய் வளமுடைய தென்னமரிக்க நாடு
x. ஆபிரிக்காவில் விருத்தியடைந்த நாடு

*(10 புள்ளிகள்)*

## பகுதி – III

### பகுதி – ''அ'' பௌதிகப் புவியியல்

1) i. புவியின் பிரதான தகடுகள் நான்கு தருக? (02 புள்ளிகள்)

ii. தகடுகள் அசைவிற்கு உட்படுகின்ற மூன்று முறைகளையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii. தகட்டு அசைவினல் ஏற்படும் விளைவுகள் மூன்று குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

2) i. ஆற்றின் இளமைப் பருவத்தில் காணக்கூடிய பண்புகள் நான்கு தருக. (02 புள்ளிகள்)

ii. ஆற்றின் அரித்தல் செயற்பாடுகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

iii. ஆற்று அரிப்பினால் உருவாகின்ற மூன்று நிலவுருவங்களை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

### பகுதி – ''ஆ'' மானிடப் புவியியல்

3) i. குடியிருப்பு என்றால் என்ன? வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

ii. நகரக் குடியிருப்பின் பண்புகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

iii. குடியிருப்பின் நவீன போக்குகள் மூன்று குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

4) i. இலங்கையின் நிர்வாக நகரம், தங்கும் நகரங்கள் ஒன்று வீதம் தருக. (02 புள்ளிகள்)

ii. இலங்கையின் நகரமயமாக்கலில் செல்வாக்குச் செலுத்தியுள்ள மூன்று காரணிகளைத் தருக. (03 புள்ளிகள்)

iii. இலங்கையின் நகராக்கத்தின் போக்குகள் மூன்று குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

agaram.lk

### பகுதி – ''இ'' செய்முறைப் புவியியல்

5) i. செய்முறைப் புவியியலின் நுட்பமுறைகள் நான்கு தருக. (02 புள்ளிகள்)

ii. நவீன பட வரைகலையியலின் பொது இயல்புகள் மூன்று குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii. இடம் சார்தரவு இடம் சாரா தரவு என்பவற்றை உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)


6) i. பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை என்றால் என்ன? (02 புள்ளிகள்)

ii. பூகோள இடநிலைப்படுத்தல் முறையின் மூன்று பிரிவுகளையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii. பூகோள இடநிலைப்படுத்தலின் பயன்பாடுகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (05 புள்ளிகள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, நவம்பர் - 2019

தரம் 12 புவியியல் படம் (2 ஆம் வினாவிற்கு உரியது)



agaram.lk